தினமலர்

18, August 2013

# சங்கர நேத்ராலயாவில் கருத்தரங்கம்

சென்னை, ஆக. 18-

சுகாதார துறையில் தொடர் வினியோக மேலாண்மை கருத்தரங்கம், 'தி சங்கர நேத்ராலயா அகடமி'யில் நேற்று நடைபெற்றது.

சுகாதார கருவிகள் தயாரிப்பு, வினியோகம், மருந்து தயாரிப்பு, சுகாதாரம் சார்ந்த நிர்வாக சேவையின் முக்கியத்துவம் குறித்து, 'சுகாதாரத் துறையில் தொடர் வினியோக மேலாண்மை' என்ற தலைப்பில், கருத்தரங்கம் நடைபெற்றது.

அகடமி பதிவாளர் அகிலா கணேசன், சங்கர நேத்ராலயாவின் செயல்பாடு மற்றும் மருத்துவ துறை சேவை குறித்து உரையாற்றினார். சி.ஐ.ஐ., லாஜிஸ்டிக் நிறுவன தலைவர், கே.வி. மஹிதர், வினியோக மேலாண்மை குறித்து சிறப்புரையாற்றினார்.

இந்த நிறுவன ஆலோசகர் சுப்ரமணியம், வினியோக மேலாண்மை உட்கூறுகள் குறித்து பேசினார்.

அப்பல்லோ மருத்துவமனை பொதுமேலாளர் நாகப்பன், 'சங்கர நேத்ராலயா அகடமி' அலுவலர் மகாலிங்கம் உள்ளிட்டோர் கருத்தரங்கில் பங்கேற்றனர்.



'தி சங்கர நேத்ராலயா அகடமி'யில் நேற்று நடந்த கருத்தரங்கில், சி.ஐ.ஐ., லாஜிஸ்டிக் நிறுவன தலைவர் மஹிதர் உரையாற்றினார்.

THE HINDU

*17 Aug 2013*

CHENNAI: The Sankara Nethralaya Academy (TSNA) and Confederation of Indian Industry–Institute of Logistics will hold a seminar on “Supply Chain Management Focus in Healthcare Sector” on Saturday. The programme will be held at 2.30 p. m. in the auditorium within Sankara Nethralaya. For complimentary registrations, contact Nancy, Programme Coordinator. Ph: 044-49086017, email: nancy@snmail.org — Special Correspondent

---

தினமலர்

**நாள் : ஆகஸ்ட் 17 2013**

## தி சங்கர நேத்ராலயா அகாடெமி

### சுகாதாரத் துறையில் தொடர் விநியோக மேலாண்மை கருத்தரங்கு

### (Supply Chain Management in Healthcare Management)



தி சங்கர நேத்ராலயா அகாடமி ,சி.ஐ.ஐ.லாகிஸ்டிக் நிறுவனம் நடத்தும் சுகாதார துறையில் தொடர் விநியோக மேலாண்மை கருத்தரங்கு நேற்று சென்னையில் நடைபெற்றது. இந் நிகழ்சியில் சங்கர நேத்ராலயாஅகடமி பதிவாளர் அகிலா கணேசன் உரையாற்றினார்.

**தினமணி**

Friday, August 09, 2013

# சுகாதாரத் துறை மேலாண்மை கருத்தரங்கம்

சங்கர நேத்ராலயா அகாதெமி சார்பில், "சுகாதாரத் துறையில் தொடர் விநியோக மேலாண்மை" எனும் தலைப்பிலான கருத்தரங்கம் நுங்கம்பாக்கம் கல்லூரி சாலையில் உள்ள, சங்கர நேத்ராலயா கண் மருத்துவமனை கலையரங்கில் சனிக்கிழமை (ஆக. 17) மதியம் 2:30 மணி முதல் மாலை 4:30 மணி வரை நடைபெறும். இக் கருத்தரங்கில் பங்கேற்க அனுமதி இலவசம்.

இதில், சங்கர நேத்ராலயா அகாதெமியின் பதிவாளர் அகிலா கணேசன், சுகாதாரத் துறை சார்ந்த கல்விப் பணியில் சங்கர நேத்ராலயாவின் பங்களிப்பு பற்றி உரையாற்றுகிறார்.

http://dinamani.com/edition_chennai/chennai/2013/08/09/சுகாதாரத்-துறை-மேலாண்மை-கரு/article1725720.ece

---

**மக்கள் குரல்**

நடுநிலை நாளேடு

## பொருட்கள் சப்ளை நிர்வாகம்: சங்கர நேத்ராலயா நடத்தும் இலவச கருத்தரங்கு

சென்னை, ஆக. 10–

சங்கர நேத்ராலயா அகாடமி சுகாதாரத் துறையில் தொடர் விநியோக மேலாண்மை கருத்தரங்கை இம்மாதம் 17–ந்தேதி பிற்பகல் 2.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை சங்கர நேத்ராலயா மருத்துவமனையில் இலவசமாக நடத்துகிறது.

தலைப்பு: "சுகாதாரத்துறையில் தொடர் விநியோக மேலாண்மை".

அகாடமியின் பதிவாளர் அகிலா, கணேசன் மருத்துவத்துறை சார்ந்த கல்விப் பணியில் சங்கர நேத்ராலயா முயற்சிகள் மற்றும் செயல்பாடுகள் பற்றி உரையாற்றுகிறார். சி.ஐ.ஐ. லாஜிஸ்டிக் நிறுவனத்தின் தலைவர் கே.வி.மஹிதர், ஆலோசகர் டி.வி.சுப்ரமணியம், அப்பல்லோ மருத்துவமனையின் மெட்டீரியல்ஸ் துறை பொது மேலாளர் கே.நாகப்பன் "சுகாதார்த்துறையில் சப்ளை செயின் மேனேஜ்மெண்ட்டின் முக்கியத்துவம்" என்ற தலைப்பில் உரையாற்றுகிறார்.

கேள்வி-பதில் நேரத்தினைத் தொடர்ந்து சப்ளை செயின் மேனேஜ்மெண்ட் குறித்த எதிர்காலத் திட்டங்கள் மற்றும் கருத்தரங்கின் நிறைவு உரையினை தி சங்கர நேத்ராலயா அகாடமியின் துணை மேலாளர் ஸ்ரீதேவி வழங்குகிறார். அனுமதி இலவசம்.

NEWS TODAY

Thu, 01 Aug, 2013,

## Free seminar on healthcare

The Sankara Nethralaya Academy and CII-Institute of Logistics is jointly organising a free seminar on the critical relevance of 'Supply Chain Management in the Healthcare Sector' at Sri V D Swami Auditorium, Sankara Nethralaya Main Campus, Nungambakkam, on 17 August, between 2 pm and 4 pm.

According to a press release, the seminar would be addressed by specialists from various fields and throw light on how effective 'Supply Chain Management' in healthcare assumes major significance in view of the growing competition in this segment, the entry of national and international players into the arena, increasing awareness of their rights and growing patient expectations which have placed an enormous pressure on better utilization of resources both human and material, enhanced performance levels leading to better healthcare delivery.

Th special session with particular emphasis to the healthcare industry organised by the Sankara Nethralaya Academy would help in a more scientific, systematic and strategic approach to the optimum utilisation of resources and co-ordination of functions within the hospital and external agencies contributing to its functioning .

The session would provide hospital managers and administrators the necessary knowledge and inputs towards delivering a better patient feel, health delivery and management of the bottom line, the release said.

http://www.newstodaynet.com/newsindex.php?id=31459%20&%20section=17